செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**F.No.11-264/2024-25/CICT/Workshop - 21** **நாள்: 05.02.2025**

## பயிலரங்கம் - 21

# அறிவிப்பும் அழைப்பும்

# சமகாலத் தமிழ் வழக்காறுகளில் பழந்தமிழிலக்கியச் சொற்களின் பயன்பாடு

## (06.03.2025 - 12.03.2025)

உலகில் உள்ள பழமையான மொழிகளில் செவ்வியல் மொழியாவதற்கு வரையறுக்கப்பட்ட அனைத்துத் தகுதிகளையும் ஒருங்கேகொண்ட மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது. செவ்வியல் பண்பும், இலக்கியச் செறிவும் கொண்ட பண்டைய தமிழ் இலக்கியங்களில் தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிகம், வாழ்வியல் முறை முதலானவை பொதிந்துகிடக்கின்றன. செறிவானதொரு சமுதாய அமைப்பையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

சமுதாய அமைப்பில் குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசும் மக்கள் வேறொரு மொழி பேசும் மக்களோடு கலந்து உறவாடுகின்ற தன்மை இயல்பாக அமைந்துவிடுகின்றது. அந்தச் சூழலில் மொழிக்கடன் இயல்பாக ஏற்பட்டுவிடுகின்றது. இந்தத் தன்மையில் தமிழ் மொழியானது பிற மொழிகளுக்குக் கடன் வழங்கிய சொற்கள் மிக அதிகமாகும். தற்காலத் தமிழ்ப் பேச்சுவழக்குகளில் பிறமொழிச் சொற்களின் கலப்புகள் காணப்பட்டாலும் தமிழ்மொழி தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்ததாக விளங்குகின்றது. இத்தன்மைக்கு அடிப்படைக் காரணம் தமிழ் மொழியில் காணப்படும் சொல்வளங்களே ஆகும். வேறு மொழிகளை ஒப்பிட்டு நோக்குகின்றபோது தமிழ்மொழி வேர்ச்சொற் களஞ்சியமாகத் திகழ்வதை நாம் தெளிவாக உணரலாம்.

சங்க இலக்கியங்களில் உள்ள சில பாடல்கள் நாட்டுப்புற இலக்கியச் சாயல் கொண்டிருப்பதைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் வழக்கில் உள்ள வினா எழுப்பி விடையளிக்கும் விடுகதை என்பது, நாட்டுப்புற இலக்கிய அழகியலுக்குச் சிறந்த சான்றாகும். இந்த விடுகதை முறையைச் சங்க இலக்கியங்களில் வரும் ‘பாயா வேங்கை’, ‘ஓடாக் குதிரை’, ‘பூவா வஞ்சி’ எனவரும் சொல்வழக்குகளோடு ஒப்பிட்டு உணரலாம்.

**“ஐதேய்ந் தன்று பிறையும் அன்று**

**மைதீர்ந் தன்று மதியும் அன்று**

**வேயமன் றன்று மலையும் அன்று**

**பூவமன்   றன்று சுனையும் அன்று**

**மெல்ல இயலும் மயிலும் அன்று**

**சொல்லத் தளரும் கிளியும் அன்று”   (கலி. 55: 9 -14)**

எனவரும் கலித்தொகைப் பாடலில், சங்கப் புலவர் கபிலர் விடுகதை அழகியலை, புதிர்த் தன்மையுடன் புகுத்திப் பாடியுள்ள தன்மை இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

தொல்காப்பியர் இதனைப் ‘பிசி’ என்று குறிப்பிடுவார். நாட்டுப்புறவியல் தொடர்பான பண்பாட்டுக் கூறுகள் சங்க இலக்கியத்தில் இரண்டறக் கலந்திருக்கின்றன. இவற்றைச் சிந்தித்து ஆராய்ந்து, சமகால மக்கள் வழக்குகளோடு ஒப்பிட்டு நோக்கின்றபோது சங்க இலக்கியச் சொற்கள் சமகால வழக்கில் வழங்கிவருவது துலக்கமாகப் புலப்படும். தமிழ்ச் சொற்களின் வரலாற்றுமுறை ஆய்வுக்கும் இது பயன்படும். இதனைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **“சமகாலத் தமிழ் வழக்காறுகளில் பழந்தமிழிலக்கியச் சொற்களின் பயன்பாடு”** என்னும் தலைப்பிலான பயிலரங்கை நடத்த உள்ளது.

இப்பயிலரங்கில் தமிழிலக்கியம், மொழியியல், சமூகவியல், அகராதியியல் முதலான துறைகளில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பங்கேற்கலாம். அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை **- 40**
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: **06.03.2025 முதல் 12.03.2025** வரை 7 நாள்கள்.
3. பயிலரங்கு நடைபெறும் நேரம்: முற்பகல் 10.00 - 01.00 & பிற்பகல் 02.00 - 5.00.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் பங்கேற்க விரும்புவோர் https://forms.gle/ZgZL9HtyrDFe7WoQ9 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழே தரப்பட்டுள்ள விரைவுக் குறியீடு (OR Code) மூலமாகவோ விண்ணப்பத்தை நிறைவுசெய்து அனுப்பிவைக்கலாம்.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: **26.02.2025.** இதற்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.
11. பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **28.02.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.
12. பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். தாமதமோ, இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**